# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2135/68 - 2019 අගෝස්තු මස 10 වැනි සෙනසුරාදා - 2019.08.10

*2135/68 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 10 ஆந் திகதி சனிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

***1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்***

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*திருத்தப்பட்டவாறான, 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக, நிதி அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதனகத்துப் பின்னர் வந்துள்ள அட்டவணையின் நிரல் I இல் 7 ஆம் விடயத்தின் மீது ஏற்புடைமையாக நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விபரத்தினை இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டுள்ள 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதிய 2114/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் நிரல் I இல் 7 ஆம் விடயத்தின் மீது ஏற்புடைமையாக நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விபரம் மீது பதிலீடு செய்தல் வேண்டுமெனப் பிரகடனப்படுத்துகிறேன்.*

*மங்கள சமரவீர,*
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2019, ஒகத்து 10.*

**அட்டவணை**

| *இல.* *I* | *விபரம்* *II* |
|---|---|
| 7. | *2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அந்நியச் செலாவணி செலவிடப்படாத வகையில் அல்லது 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் நாணயக் கடிதம் திறக்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்டும், மற்றும் 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதிக்குப் பின்னர் திருத்தியமைக்கப்படாததும் மற்றும் 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இலங்கைச் சுங்கத்திலிருந்து விடுவிக்கப்படுகின்ற ஏதேனும் வாகனமொன்று* |

*08-1032*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.